NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 22 June 2020

ஆரம்பகால குழந்தை வளர்ப்பு பற்றிய தேசிய பல்கலைக்கழக ஆய்வு

# தாய்மாரே குழந்தை வளர்ப்பில் அதிக பொறுப்பை ஏற்கின்றனர்

கணவன், மனைவி இருவரும் முழுநேர வேலை செய்தாலும், ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக குழந்தை பராமரிப்பு பொறுப்புகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்று ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யூஎஸ்) மேற்கொண்ட இந்த ஆய்வு, தந்தையருடன் ஒப்பிடும்போது தாய்மார்கள் தங்கள் சிறு பிள்ளைகளுடன் வார நாட்களில் இரு மடங்கு அதிக நேரம் செலவிடுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

வார இறுதி நாட்களில், இந்த இடைவெளி சிறிதாக இருந்தாலும், குழந்தை பராமரிப்பில் மனைவிகளே கணவனைவிட அதிக நேரம் செலவிடுகிறார்கள்.

“குழந்தைகள் பிறந்ததிலிருந்து ஆறு வயது வயதாகும் வரையில், அவர்களுடன் தந்தை செலவிடும் நேரம் சிறிதளவே அதிகரிக்கிறது” என்று ஆய்வின் முதன்மை ஆய்வாளர் பேராசிரியர் ஜீன் யுங் கூறினார்.

குழந்தைகளின் ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சியை ஆய்வு செய்வதற்காக என்யுஎஸ்-இன் குடும்பம், மக்கள் தொகை ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துளள்து.

இந்த முடிவுகள் பெற்றோருடன் வாழும் 4,719 குழந்தைகளின் அன்றாட கால அட்டவணை அடிப்படையில் அமைந்தன.

பங்கேற்றவர்களில் 95 விழுக்காட்டினர், குழந்தைகளின் முதன்மை பராமரிப்பாளர்களான தாய்மார்கள். தோராயமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வாரநாளிலும், வார இறுதி நாளிலும் குழந்தையின் 24 மணி நேர செயல்பாடுகளை பதிவு செய்யுமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொரு செயலிலும் குழந்தை யாருடன் ஈடுபடுகிறது எனக் குறிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

நேர்காணல்களும் இடம்பெற்றன. ஆய்வில் இடம்பெற்ற ஏறக்குறைய முக்கால்வாசி தாய்மார்களும், 97 விழுக்காடு தந்தையர்களும் பெரும்பாலும் முழுநேர வேலை செய்கிறார்கள்.

மூன்றில் ஒரு பகுதியினருக்கு வீட்டில் பணிப்பெண்கள் இருக்கின்றனர். கால்வாசி குடும்பங்களில் தாத்தா, பாட்டிமார் உடன் வசிக்கின்றனர்.

பராமரிப்பு, விளையாட்டு - உடனிருத்தல், குடும்பத்தினர், நண்பர்களைச் சந்திக்க வெளியே செல்வது போன்ற நடவடிக்கைகள், இலக்கை அடைவது போன்ற நடவடிக்கைகள், சுற்றுப் பயணம் ஆகிய ஐந்து வகையான குழந்தை பராமரிப்பு நடவடிக்கைகளையும் இந்த ஆய்வு கவனத்தில் கொண்டது.

ஐந்து பிரிவுகளிலும் தந்தையரைவிட தாய்மாரே குழந்தையுடன் அதிக நேரத்தை செலவிடுகிறார்கள். தந்தையர், பராமரித்தல் இலக்கை அடைவது போன்ற செயல்பாடுகளில் மிகக் குறைந்த நேரமே செலவிடுகின்றனர்.

இவை வாசிப்பு, வீட்டுப்பாடம் அல்லது புறப்பாட நடவடிக்கைகளைக் குறிக்கின்றன.

எனினும் தந்தையர்கள் விளையாட்டு நடவடிக்கைகளில், குறிப்பாக வார இறுதி நாட்களில் விளையாட்டுகளில் சிறப்பாக செயல்படுகிறார்கள்.

கல்வி அமைச்சின் நிதி ஆதரவில் நடத்தப்பட்ட இந்த ஆய்வு கடந்த ஆண்டு தனது முதல் கட்ட தரவு சேகரிப்பைப் பெற்றது. இது தேசிய அளவில் பிரதிநிதித்துவம் இடம்பெறும் வகையில் ஆறு வயது வரையுள்ள 5,021 சிங்கப்பூர் குழந்தைகள், அவர்களது முதன்மை பராமரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டது.

ஒட்டுமொத்தமாக, சராசரியாக, தாய்மார்கள் வார நாட்களில் தங்கள் குழந்தையுடன் 3 மணி, 51 நிமிடங்களை நேரடியாகச் செலவிடுகின்றனர். இதனுடன் ஒப்பிட தந்தையர் வார நாட்களில் குழந்தையுடன் 1 மணி, 44 நிமிடங்களைச் செலவிடுகின்றன.

“தாய் வேலைக்குப் போனாலும் வீட்டில் இருப்பவராக இருந்தாலும், வார நாட்களில் தந்தை செலவிடும் நேரம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கிறது,” என்று பேராசிரியர் யுங் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் செய்தித்தாளிடம் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.